[1986 மே 6

மதுராந்தகத்தில் சிறு காகித ஆலை.

672—(* வினா எண் 6014) திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகத்தில் ஒரு மினி பேப்பர் ஆலை தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) மற்றும் (ஆ) 1980-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் மதுராந்தகத்தில் ஒரு மினி பேப்பர் ஆலை தொடங்க அரசு ஒப்புதல் அளித்தது. பிறகு சிறு காகித ஆலை அமைக்கும் திட்டம் தொழில் அளவில் சாத்தியமாக இருப்பினும், பொருளாதார ரீதியில் கட்டுப்படியாகாது என வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். இந்த கருத்தின் அடிப்படையில் மேற்கூறிய திட்டத்தினை கைவிட அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த மினி பேப்பர் ஆலை மதுராந்தகத்தில் தொடங்குவதற்கான திட்டமிருந்தும், அது கைவிடப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு மதுராந்தகத்தைச் சுற்றி இருக்கக்கூடிய அந்த சுற்றுப்புற சூழ்நிலைகளில் இந்த மினி பேப்பர் ஆலையைத் தொடங்குவதற்கான கச்சாப் பொருள்களான கரும்புச் சக்கை, யூகலிப்டஸ் மரங்கள், மற்றும் இதர கச்சாப் பொருள்கள் அதிகமாக அங்கே கிடைக்கின்றன. இந்த மதுராந்தகம் ஊரானது தமிழகத்திலே போக்குவரத்திற்கு ஒரு முக்கிய கேந்திரமாக உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறு பரிசீலனை செய்து, இந்த மினி பேப்பர் ஆலையை—அன்றைக்கு பாரதிதாசன் சொன்னார், "ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம்" என்று சொல்லிய அந்த பழம்பெரும் புலவர் பாடலுக்கு ஏற்ப, அந்த காகித ஆலையை அரசு அங்கே அமைத்துத் தருமா என்று தொழில் அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

1986 மே 6]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார், பாரதிதாசன் இரண்டில் ஒருவர் சொல்லி இருக்கிறார். . . . (கூச்சல்—குழப்பம்) அது பாரதியார் சொன்ன பாடல் தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் இலக்கியம் பேசுவதால் வந்த நிலை இது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுராந்தகம் காகித ஆலையைப் பொறுத்தவரையில் அது சிறு காகித ஆலையாக அப்போது திட்டமிடப்பட்டது. சிறு காகித ஆலை, கரும்புச் சக்கையிலிருந்து செய்வது லாபமாகயிராது என்பதுதான் அப்போது அளிக்கப் பட்ட தீர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் தங்கவேலு அவர்கள் சிறு காகித ஆலையை பற்றி மீண்டும் கேட்கிறார்கள். பெரிய காகித ஆலை தற்போது வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண் டிருக்கிறது. அதுபோன்ற ஒரு திட்டத்தை பல்வேறு வசதிகள் இருக்கின்ற இடங்களை தேர்ந்தெடுத்து—வேண்டுமானால் ஒரு குழு போட்டு பரிசீலிக்கலாம்.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இப்போது மினி பேப்பர் ஆலை தொடங்குகின்ற காரணத் தால் மதுராந்தகத்தை சுற்றியிருக்கின்றவர்கள்—தீண்டத்தகாத தொழிலாளர்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் அதற்கடுத்தாற்போல் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள நரிக்குற வர்கள் நிறைய இருக்கக்கூடிய ஒரு பகுதி. ஆகவே, தயவு செய்து தொழில் துறை அமைச்சர் அவர்கள் இந்த இடத்தில் மீண்டும் உடனே ஒரு ஆலை நிறுவுவதற்கு ஆவன செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜாதிக்காரர்கள் தான் இந்த பேப்பரை செய்கிறார்கள் என்று ஒன்றும் இலக்கணம் இல்லை. அது பெரிய ஆலையாக இருந்தால் அநேகமாக அதிகம் படித்தவர்கள் எல்லாம் தேவைப்படுகிறார்கள். அப்படித்தான் இப்போது இருக் கின்ற புகளூர் ஆலையில் நிர்வாகிகள் இருக்கிறார்கள். மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர்கள்தான் வேலைக்கு

அமர்த்தப்படுகிறார்கள். அது முழுமையாக இயந்திரமயமாக்கப்பட்ட தொழிற்சாலையாகத்தான் இயங்கி வருவதை நான் பார்த்து இருக்கிறேன். மற்ற வசதிகள் எப்படி இருக்கின்றன என்பதை பார்த்துத்தான் ஒரு காகித ஆலை நிறுவ முடியும். பெரிய காகித ஆலை என்றால் தற்போது ரூ. 250 கோடியாகும். அரசாங்கம் பலவிதமான பரிசோதனைகள் செய்த பின்புதான் ஏற்றுக்கொள்ள முடியும்.

பெரம்பலூர் சர்க்கரை ஆலை.

673—(* வினா எண் 7813) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் துணை யூனிட்டை ஜெயங்கொண்டம் தொகுதியில் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: திருச்சி மாவட்டம் பெரம்பலூர் சர்க்கரை ஆலை துணை யூனிட் ஒன்று பெரம்பலூர் வட்டத்தில் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது. மத்திய அரசிடமிருந்து உரிமம் கிடைத்ததும், ஆலை அமைப்பதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்படும்.

டாக்டர் ந. மாசிலாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டான் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அங்குள்ளவர்கள் விவசாயத்தை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். 15 ஏக்கர் பாசனத்தை பெறுகின்றது. அங்கே நெல் விளைவித்து நட்டம் ஏற்படுகின்றது. எனவே, பெரம்பலூர் சர்க்கரை ஆலையினுடைய துணை ஆலையை அங்கே நியமித்தால் அதன் மூலமாக கரும்பு உற்பத்தி செய்து விவசாயிகள் பலன் பெறுவதற்கு வாய்ப்பாக அமையும். எனவே, இதை மனதிலே கொண்டு அமைச்சர் அவர்கள் இந்த ஜெயங்கொண்டான் தொகுதியிலே ஆரம்பிப்பதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் துணை சர்க்கரை ஆலையை அமைப்பது பற்றி அரசு ஒரு முடிவு ஏற்கனவே எடுத்து இருக்கிறது. எந்த இடம் என்பது பற்றித்தான் முடிவு எடுக்க